**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No.44/2007 P.W.7/L.W.11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி.கிளமன்சியாள் | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 09.10.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் திருநெல்வேலி மாநகராட்சி குற்றப்பிரிவில் ஆய்வாளராக பணி செய்து பணி நிறைவு பெற்று உள்ளேன். 15.01.2007ம் தேதி நான் உதவி ஆய்வாளராக குளச்சல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 20.30 மணிக்கு நிலையத்தில் இருந்த போது பாலப்பள்ளம் அஞ்சல் மிடாலக்காடு சுதீர் மனைவி பத்மா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று மனுவின் தன்மைக்கு ஏற்ப குற்ற எண்.02/2007 ச.பி. 498ஏ, 323, 506 பத்தி ஒன்று இ.த.ச வாக வழக்கு பதிவு செய்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார் மனு ஆகியவைகளை கனம் இரணியம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். புகார்தாரரான காயம் பட்ட நபரை மருத்துவ நமூனா கொடுத்து குளச்சல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன்.

3. பின் இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான நான் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்து கொண்டு சாட்சி பத்மா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை தேடி வீட்டிற்கு சென்ற போது வீடு பூட்டி இருந்ததால் சம்பவ இடத்தை பார்வை யிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ய

இயலவில்லை. பின் எதிரிகளை தேடி சென்றதில் 2வது எதிரி தங்க நாடான் என்பவரை மிடாலக்காடு ஜங்சனில் வைத்து அன்றைய தினமே 22.00 மணிக்கு கைது செய்து உச்ச நீதிமன்ற உத்தரவு பின்பற்றியும் எதிரியை 22.45 மணிக்கு நிலையம் கொண்டு வந்து தகுந்த ஆவணங்களில் பதிவு செய்து குளச்சல் காவல் நிலையத்தில் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

4. பின் சாட்சிகள் இரத்தினசாமி , தங்கராஜன், ஜெயசேகர் ஆகியோர்களையும் சதாரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 26.01.2007ம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு சம்பவ இடத்தினையும் அதன் சுற்றுப்புறங்களிலும் சாட்சிகள் வர்கீஸ், வில்சன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன்.அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 மற்றும் பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. சாட்சிகள் வர்கீஸ், வின்சன்ட், கமலா பாய் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு மேல் விசாரணக்காக வழக்குக் கோப்பை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. நீதிமன்றத்திற்கும் எங்கள் காவல் நிலையத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் தெரியவில்லை. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை 08.30 மணிக்கு பதிந்ததாக சொன்னதை பொறுத்து அது மறு தினம் 04.00 மணிக்கு தான் நீதிமனற்த்தில் தரப்பட்டுள்ளது என்றால் சரிதான். அடைப்பு காவல் அறிக்கையுடன் தான் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. என் முதல் விசாரணையில் நான் அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கையை நான் நீதிமன்றத்திற்கு அனுப்பியதாக சொன்னதை பொறுத்து எது உண்மை என்றால் நான் அன்றைய தினமே கொடுத்து விட்டேன். 15.01.2007–ம் தேதி இரவு 08.30 மணியளவில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை தலைமை காவலிரிடன் கொடுத்த தகவலை நான் என் மேல் அதிகாரி என்னை விசாரிக்கும் போது சொன்னேனா என்றால் அவசியம் இல்லாததால் சொல்லவில்லை.

3. முதல் தகவல் அறிக்கை சொன்ன விதத்தில் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மையிலேயே 15.01.2007–ம் தேதி பதிவு செய்திருந்தால் அன்றைய தினமே அனுப்பி இருப்பேன் என்றால் சரியல்ல. புகார் மனுவை மனுதாரர் எழுதி கொண்டு வந்தார். புகார் மனுவில் 50,000 என்பது இடை சொல்லாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புகாரில் வரதட்சணை கொண்டு வரவில்லை எனபது இடைச்சொல்லாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. நான் 12.01.2007– ம் தேதி சம்பவ இடம் சென்ற போது வீடு பூட்டி உள்ளது என்ற சங்கதியை மேல் அதிகாரியிடம் தெரிவித்தேனா என்றால் வழக்கிற்கு தேவையில்லை என்பதால் கூறவில்லை. மேற்படி சங்கதியை வழக்கிற்காக முதல் முதலில் நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அன்றைய தினம் சம்பவ இடம்செல்லவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

5. புகார்தாரர் 12.12.2006–ம் தேதி அன்று சம்பவம் நடந்ததாக என்னிடம் எதாவது புகார் கொடுத்தார்களா என்றால் நியாபகம் இல்லை. ஏன் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டது என்று மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவ நமூனா சொன்னதை பொறுத்து மேற்படி காயம் எவ்வாறு ஏற்பட்டது என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 12.12.2006–ம் தேதி அன்று ஏற்பட்டதாக சொல்லப்படும் காயத்தை பொறுத்து புகார்தாரர் எங்காவது சிகிச்சை எடுத்து வந்ததாக சொன்னார என்றால் இல்லை. நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

6. வாதியின் வீட்டில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு சம்பவம் வாதியின் வீட்டிற்குள் நடந்ததாக சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. நான் அன்றைய தினம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு எத்தனை மணிக்கு சம்பவ இடம் சென்றேன் என்றால் எனக்கு உறுதியாக தெரியவில்லை.

7. 20.11.1998 முதல் 2005 வரை 1–வது குற்றம் சுமத்தப்பட்ட நபரும் அவரது தாய் தந்தையரும் கொடுமைப்படுத்தியதாக ஏதேனும் புகார் கொடுத்தாரா என்றால் 2005ம் ஆண்டு வரை சந்தோசமாக தான் இருந்ததாக சொல்லி உள்ளார். சோபியா என்ற நபரை பொறுத்து அவருடன் தொடர்பில் 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் இருந்ததாக சொன்னதை பொறுத்து நான் அவரை ஏதேனும் விசாரித்தேனா என்றால் இல்லை.

8. புகார்தாரர் தன்னை 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ரூ.50,000 வாங்கி வா என்று கேட்டதாக என்னுடைய வாக்குமூலத்தில் சொல்லி உள்ளாரா என்றால் மேலே சொல்லவில்லை. கீழே சொல்லி உள்ளார். 4வது குற்றம் சுமத்தப்பட்ட நபரை பொறுத்து அவர் வரதட்சணை கேட்டதாக வாக்குமூலம் எதுவும் சொல்லப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி காலக்கட்டத்தில் 4வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் புகார்தாரரின் வீட்டில் வசித்ததாக எங்காவது சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

9. 1–வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் புகார்தாரரை 6 மாதம் தொடர்ந்து பணம் வாங்கி கொண்டு வர சொல்லி தொல்லை செய்ததாக எனது விசாரணையில் சொல்லி உள்ளாரா என்றால் குறிப்பிடவில்லை.

**நேரம் மாலை 06.00 மணி என்பதால் நேரமின்மை காரணமாக மேற்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி 06.11.2024 தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.